| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 28.07.2026 | |
| CC.No.60/2020 | |
| சாட்சி :PW9 | |
| பெயர் : திருமதி. அனுஷா மனோகரி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. நாகராஜ் | தொழில் : காவல் ஆய்வாளர் |
| கிராமம் : மதுரை | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 44/2026 |
| (எதிரி ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை மாநகர், அவனியாபுரம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் நான் துவரங்குறிச்சி காவல் நிலையத்தில வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். அப்போது பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பழனிச்சாமி என்பவரால் பதிவு செய்யப்பட்ட துவரங்குறிச்சி காவல் நிலைய குற்ற எண்.119/2019 வழக்குக்கோப்பினை மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்க நான் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான துவரங்குறிச்சி இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு சென்று 19.07.2019 அன்று சாட்சிகள் புகார்தாரரான பிரேம்குமார் என்பவரை விசாரணை செய்தும் மற்றும் சுகன்யா, பீட்டர் சகாயராஜ், அல்போன்ஸ் ராணி, சிக்கந்தா சாய், முத்துராமலிங்கம், சுப்ரமணியன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்ந்து நான் பணியிடமாறுதலில் சென்றதால் இவ்வழக்கு கோப்பினை தொடர்விசாரணைக்காக ஜெயதேவி அவர்கள் வசம் ஒப்படைத்தேன். அவர் என்னை இவ்வழக்கு தொடர்பாக விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.3 அல்போன்ஸ் ராணியை நான் என்ன தேதியில் எங்கு வைத்து

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் 19.07.2019-ம் தேதி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வைத்து விசாரித்தேன். அதேபோல் அ.சா.3 அல்போன்ஸ் ராணி எனது விசாரணையில் அ.சா.4 பீட்டர் சகாயராஜ் 07.06.2019-ம் தேதியன்று தன்னிடம் ரூ.20,000/- கொடுத்து, அதில் ரூ.12,000/-த்தை எதிரியிடம் கொடுக்கச்சொன்னதாகவும் மீதம் ரூ.8,000/-த்தை அவரே வைத்துக்கொள்ளச்சொன்னதாகவும் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.4 பீட்டர் சகாயராஜ் என்பவரும் தனது விசாரணையில் 07.06.2019-ம் தேதியன்று ரூ.20,000/-த்தை கொடுத்து, அதில் ரூ.12,000/-த்தை எதிரியிடம் கொடுக்கச்சொன்னதாகவும் மீதம் ரூ.8,000/-த்தை அவரே வைத்துக்கொள்ளச்சொன்னதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வங்கிக்கு நேரடியாக சென்று விசாரணை நடத்தினேனா என்றால் நடத்தினேன். வங்கியின் உள்ளமைப்பை காட்டுவதற்கு வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட CCTV பதிவுகளை நான் பார்த்தேனா, ஆய்வு செய்தேனா என்றால் பார்த்தேன். வங்கி நிர்வாகம் Head Office ல் கேட்டு அனுமதி பெற்று காவல் நிலையத்தில் தாக்கல் செய்வதாக கூறினார்கள். அதனால் நான் கைப்பற்றவில்லை. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் கைப்பற்றி தாக்கல் செய்துள்ளார். வங்கியில் எத்தனை CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தது என்றால் தற்போது ஞாபகமில்லை. அந்த கேமராக்கள் எவ்வளவு நேரம் பதிவாகும் என்றால் அதுதொடர்ச்சியாக பதிவாகும். 30 நாட்கள் சேமிப்பில் இருக்கும். நான் பார்த்த CCTV கேமரா பதிவு எவ்வளவு நேரம் பதிவாகியிருந்தது என்றால் தற்போது ஞாபகமில்லை. அதேபோல் CCTV கேமரா பதிவுகளை தடய அறிவியல் நிபுணர் ஆய்வுக்கு அனுப்பப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. இந்த வழக்கில் புகாரைத்தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் நகல் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அவை நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.